# தமிழ் நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு ) சட்டம், 2010

## வினா – விடை

1. இந்தத் திட்டத்தின் கீழ் யார் விண்ணப்பம் செய்யலாம் ?

31.3.2007–ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் வரிவிதிப்பு செய்யப்பட்ட வணிகர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

2. சம்பந்தப்பட்ட சட்டங்கள் என்பன யாவை ?

i) தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.
ii) தமிழ் நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970.
iii) தமிழ் நாடு விற்பனை வரி (உபரி வரி) சட்டம், 1971.
iv) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956.

3. எந்த நிலுவைகள் தீர்வு செய்வதற்குத் தகுதியுடயவை ?

1.4.2007–ஆம் தேதிக்கு முன்பாக கேட்பு எழுப்பப்பட்ட வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, கூடுதல் விற்பனை வரி, தண்டத் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவை ஆகும்.

4. விண்ணப்பம் செய்வதற்கு நிபந்தனைகள் யாதேனும் உள்ளனவா ?

ஆம். இத்திட்டத்தின் கீழ், விண்ணப்பிக்கும் நாளில், வணிகர் மீது விதிக்கப்பட்ட வரிவிதிப்புக்கு எதிராக ஏதாவது நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீடு மனு அல்லது சீராய்வு மனு ஏதும் நிலுவையில் இல்லாதிருத்தல் வேண்டும்.
{பிரிவு 4}

5. யாரிடம் விண்ணப்பம் அளித்தல் வேண்டும் ?

பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பின் (Designated Authority) முன்பாக விண்ணப்பம் அளித்தல் வேண்டும். {பிரிவு 3}

6. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பு என்பவர் யார்?

சம்மந்தப்பட்ட கோட்டத்தின் இணை ஆணையர் (வணிகவரிகள்).

7. விண்ணப்பம் எவ்வாறு அளித்தல் வேண்டும்?

படிவம்-I–ல் இத்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகை, செலுத்தியதற்கான ஆதாரத்துடன் வரிவிதிப்பு ஆணை மற்றும் தண்டத்தொகை ஏதேனும் விதிக்கப்பட்டிருப்பின், அவற்றின் ஆணை நகல்கள் இரட்டிப்பில் அளித்தல் வேண்டும்.

8. செலுத்த வேண்டிய தொகை யாது?

<u>கணக்குகள் தாக்கல் செய்யாமல் சிறந்த தீர்ப்பின் அடிப்படையில் வரிவிதிப்பு செய்யப்பட்ட இனங்கள் :</u>

விண்ணப்பம் செய்யும் நாளில் வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித் தொகைகள் நிலுவையில் இருந்தால் வணிகர் சமர்ப்பித்த மாதாந்திர நமுனாக்களின்படி ஒப்புக் கொள்ளப்பட்ட வரி பாக்கியுடன், விதிக்கப்பட்ட அதிகப்படியான வரி பாக்கியில் மூன்றில் ஒரு பங்கு வரி பாக்கியும், அவ்வாறு செலுத்த வேண்டிய தொகையின் மீது 6 சதவிகித வருடாந்திர வட்டியும் இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சியுள்ள வரி, தண்டத் தொகை மற்றும் வட்டித் தொகை முழுதும் நீக்கம் செய்யப்படும்.

<u>கணக்குகள் தணிக்கை செய்ததின் வாயிலாக, ஒப்புக் கொள்ளப்பட்ட வரித் தொகையை விட அதிகமாக வரிவிதிக்கப்பட்ட இனங்கள் :</u>

விண்ணப்பம் செய்யும் நாளில் வரி, தண்டத் தொகை மற்றும் வட்டித் தொகைகள் நிலுவையில் இருந்தால் வணிகர்கள் சமர்ப்பித்த மாதாந்திர நமுனாக்களின்படி ஒப்புக் கொள்ளப்பட்ட வரி பாக்கியுடன் அதிகமாக விதிக்கப்பட்ட

வரிபாக்கியில் மூன்றில் ஒரு பங்கும், அவ்வாறு செலுத்த வேண்டிய தொகையின் மீது 6 சதவிகித வருடாந்திர வட்டியும் இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சியுள்ள வரி, தண்டத் தொகை மற்றும் வட்டித் தொகை முழுதும் நீக்கம் செய்யப்படும்.

**வணிகர்கள் சமர்ப்பித்த நமுனாக்களின் அடிப்படையில் வரிவிதிப்பு செய்து வரி ஒப்புக் கொள்ளப்பட்ட இனங்கள்:**

விண்ணப்பம் செய்யும் நாளில் வரிபாக்கி முழுவதுடன் கட்ட வேண்டிய வரி பாக்கியின் மீது 6 சதவிகித வருடாந்திர வட்டித் தொகையும் செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள தண்டத் தொகை, வட்டித் தொகை ஆகியவை முழுதும் நீக்கம் செய்யப்படும்.

**வரிபாக்கி எதுவும் நிலுவையில் இல்லாமல் தண்டத் தொகை அல்லது வட்டித் தொகை அல்லது இரண்டும் நிலுவையில் உள்ள இனங்கள் :**

தண்டத் தொகையில் 10 சதவிகிதம் மற்றும் வட்டித் தொகையில் 25 சதவிகிதம் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சியுள்ள தண்டத் தொகை மற்றும் வட்டித் தொகை நீக்கம் செய்யப்படும்.

9. விண்ணப்பம் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு ?

இச்சட்டம் நடைமுறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று மாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

10. எந்த தேதியிலிருந்து இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது ?

1.6.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

11. இந்த விண்ணப்பத்தின் நகலை வேறு எந்த அதிகார அமைப்புக்கு அனுப்புதல் வேண்டும்?

இந்த விண்ணப்பத்தின் நகல் ஒன்று

i) வரிவிதிப்பு அலுவலருக்கும்
ii) மேல்முறையீடு செய்து நிலுவையில் இருந்தால் மேல்முறையீட்டு அதிகார அமைப்புக்கும்
iii) சீராய்வு மனு கொடுத்து நிலுவையில் இருந்தால் சீராய்வு மனு அதிகார அமைப்புக்கும்

அனுப்புதல் வேண்டும்.

{பிரிவு 5 (3)}

12. மேற்குறித்த நகலை அனுப்பி வைக்க அனுமதிக்கப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு?

பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பின் முன்பாக விண்ணப்பம் செய்த 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

13. பல வருடங்களுக்கும் சேர்த்து ஒரே விண்ணப்பம் சமர்ப்பிக்கலாமா?

கூடாது. ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டிற்கும் தனித் தனியாக விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும். {பிரிவு 5 (2)}

14. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 மற்றும் மத்திய வரி விதிப்புச் சட்டம், 1956 ஆகியவற்றிற்கு ஒரே விண்ணப்பம் சமர்ப்பிக்கலாமா?

கூடாது. ஒவ்வொரு சட்டத்திற்கும் தனித் தனியாக விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும்.

15. வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, கூடுதல் விற்பனை வரி முதலானவற்றிற்கு தனித் தனியாக விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டுமா ?

தேவையில்லை. ஒரே விண்ணப்பத்தில் ஒரு வருடத்திற்கான வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, கூடுதல் விற்பனை வரி முதலானவை அடங்கியிருக்கலாம்.

16. வரி தள்ளிவைப்புத் திட்டத்தின் கீழ் (Deferral Scheme) நிபந்தனை மீறியதன் விளைவாக வரி பாக்கியுள்ள வணிகர்கள் இத்திட்டத்திற்குத் தகுதியுடையவர்களா ?

தகுதியடையவர்களே. ஆனால், நிபந்தனை மீறிய தினத்திலிருந்து 6 சதவிகித வட்டி கணக்கிட்டு செலுத்த வேண்டும். அவர்களது வரிவிதிப்பு 1.4.2007–ஆம் தேதிக்கு முன்பாகவே முடிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

17. இந்தத் திட்டம் நொடிந்த வணிக நிறுவனங்களுக்குப் (sick units) பொருந்துமா ?

ஆம். இந்தத் திட்டம் மற்ற வணிகர்களைப் போல் இவர்களுக்கும் பொருந்தும்.

18. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பின் (Designated Authority) கடமைகள் யாவை ?

பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பானது அவரிடம் வரப்பெறும் விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் சரிபார்த்து அவைகள் சரியாக இருப்பின் வணிகர் இந்த திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகையினை நிர்ணயம் செய்து நிலுவைத் தீர்வுக்கான சான்றிதழ் ஒன்றினை படிவம் –V-ல் வழங்குவார்.

{பிரிவு 8 (1)} {விதி 5 (1)}

விண்ணப்பதாரரின் மனுவை உரிய ஆவணங்களுடன் சரி பார்த்த பின்னர் விண்ணப்பதாரர் பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையின்

90 சதவிகித தொகை செலுத்தப்படவில்லையாயின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். {பிரிவு 6 (3)}

வணிகர் செலுத்த வேண்டிய தொகை 10 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பின் அவற்றை செலுத்தக் கோரி படிவம் -IV—ல் அறிவிப்பு வழங்கப்படும்.

{பிரிவு 6 (2)} {விதி 4}

பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பானது வணிகர்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்ற 7 நாட்களுக்குள் வரிவிதிப்பு அலுவலர், மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு மனு அதிகார அமைப்பு ஆகியோருக்குப் படிவம் —III—ல் தகவல் தெரிவித்தல் வேண்டும். {பிரிவு 13} {விதி 3 (4)}

19. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை செலுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள கால அவகாசம் யாது ?

பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பிடமிருந்து கேட்பு வரப்பெற்ற 30 நாட்களுக்குள் தொகையினை செலுத்துதல் வேண்டும். {படிவம் IV} {விதி 4}

20. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பு விண்ணப்பத்தை திருப்பி அனுப்ப முடியுமா ?

ஆம். பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பானது விண்ணப்பத்தில் தவறுகள் அல்லது விடுதல்கள் இருந்தால் விண்ணப்பம் பெறப்பெற்ற 10 நாட்களுக்குள் விண்ணப்பத்தினை திருப்பி அனுப்பலாம்.

{பிரிவு 13} {விதி 3 (5)}

21. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பானது எந்த ஆவணங்களையும் கேட்கலாமா ?

ஆம். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் எதனையும் சரி பார்க்க எந்த வகையான ஆவணங்களையும் கோரிப் பெறலாம். {விதி 3 (6)}

22. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பானது விண்ணப்பத்தின் மீது ஆணை பிறப்பித்த பின் என்ன செய்ய வேண்டும் ?

சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு மனு அதிகார அமைப்பு ஆகியோருக்கு படிவம் -VI–ல் ஆணை பிறப்பித்தது தொடர்பான தகவல் தெரிவித்தல் வேண்டும். {விதி 5 (2)}

23. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை அவரே நீக்கம் செய்யலாமா ?

ஆம். மனுதாரர் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் மற்றும் விபரங்களைத் தந்து, பிரிவு 8–ன் கீழ் சான்றிதழ் பெற்றிருப்பின், பதவி பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பு, தான் வழங்கிய சான்றிதழினை நீக்கம் செய்யலாம். {பிரிவு 12}

24. அவ்வாறு சான்றிதழ் நீக்கம் செய்ய வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் யாது ?

சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் நீக்கம் செய்யலாம்.

25. அவ்வாறு பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால். சான்றிதழ் நீக்கம் செய்யப்பட்ட ஆணை (revocation orders) தொடர்பாக வரிவிதிப்பு அலுவலருக்கு தெரிவிக்க வேண்டிய கால அவகாசம் யாது ?

சான்றிதழ் நீக்கம் செய்யப்பட்ட ஆணை பிறப்பித்த 15 நாட்களுக்குள் தெரிவித்தல் வேண்டும். {விதி 6}

26. அவ்வாறு சான்றிதழ் நீக்கம் செய்யப்பட்ட ஆணை (revocation orders) தொடர்பாக வேறு எந்த அதிகார அமைப்பிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அதன் கால அவகாசம் யாது ?

அவ்வாறு சான்றிதழ் நீக்கம் செய்யப்பெற்ற ஆணை தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு மனு அதிகார அமைப்பு ஆகியோருக்கு படிவம் -VIII-ல் சான்றிதழ் நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். {விதி 6}

27. நிலுவைகளை செலுத்துவதற்கு உரிய வழிமுறைகள் யாவை ?

தமிழ் நாடு பொது விற்பனை வரி விதிகள்,1959, விதி எண் 55–ல் குறிப்பிட்டுள்ளபடி வரிவிதிப்பு அலுவலரின் பெயருக்கு பணமாகவோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட காசோலையாகவோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தலாம்.

28. இந்தத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்த பின்னர் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு ஆகியவற்றை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாமா ?

இந்தத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்த பின்னர் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு ஆகியவற்றை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது.

{பிரிவு 11}

29. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் சான்றிதழ் நீக்கம் செய்யப்பெற்ற ஆணை வரப்பெற்ற பின்னர் வணிகரால் மேற்கொள்ளப்பட்ட மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு ஆகியவை என்னவாகும் ?

சான்றிதழினை நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவுகளின்படி தீர்மானிக்கப்படும். {பிரிவு 12 (2)}

30. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் நீக்கம் செய்யப்பட்ட ஆணை பிறப்பித்த பின்னர் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்ட தொகை என்னவாகும் ?

எந்த வரிவிதிப்பு ஆண்டிற்கு சான்றிதழ் நீக்க ஆணை வழங்கப் பட்டதோ அந்த வரிவிதிப்பு ஆண்டிற்கு அத்தொகை அந்த வணிகர் செலுத்தியதாகக் கொள்ளுதல் வேண்டும்.

{பிரிவு 12 (3)}

31. பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட ஆணையினை எந்த அதிகார அமைப்பாவது மாற்றியமைக்க முடியுமா ?

ஆம். வணிகவரி ஆணையர், பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட ஆணையில் மேலெழுந்தவாரியான தவறுகள் ஏதும் இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் அச்சான்றிதழினை மாற்றியமைக்கலாம்.

{பிரிவு 8 (3)}

## எடுத்துக் காட்டு

(வணிகர் ஒருவர் கேட்பு நாள் முடிவடைந்து 3600 நாட்கள் கழித்து செலுத்துவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.)

### கணக்குகள் தாக்கல் செய்யாமல் சிறப்பு வரிவிதிப்பு செய்யப்பட்ட இனங்கள் :

| | | |
|---|---|---|
| 1. படிவங்கள் தாக்கல் செய்ததன்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை .. | | ரூ.25,000 |
| 2. வரிவிதிப்பில் கூடுதலாக சேர்க்கப்பட்ட தொகை .. | | |
| (a) வரி .. | ரூ.30,000 | |
| (b) தண்டத் தொகை .. | ரூ.10,000 | |
| | | ரூ.40,000 |
| மொத்த நிலுவை .. | | ரூ.65,000 |
| 3. விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய தொகை .. | | |
| படிவங்களின்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை .. | | ரூ.25,000 |
| கூடுதலாக சேர்க்கப்பட்ட தொகையில் மூன்றில்ஒருபங்கு | | ரூ, 10,000 |
| | | ரூ.35,000 |
| ரூ.35000க்கு 3600 நாள் தாமதத்திற்கு 6சதவிகித வட்டி | | ரூ.20,712 |
| | | ரூ.55,712 |

### கணக்குகள் தணிக்கை செய்ததின் வாயிலாக, ஒப்புக் கொள்ளப்பட்ட வரித் தொகையை விட அதிகமாக வரிவிதிக்கப்பட்ட இனங்கள் :

| | | |
|---|---|---|
| 1. படிவங்களின்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை .. | | ரூ.25,000 |
| 2. கணக்குத் தணிக்கையில் கூடுதலாக சேர்க்கப்பட்ட தொகை | | |
| (a) வரி .. | ரூ.30,000 | |
| (b) தண்டத் தொகை .. | ரூ.10,000 | |
| | | ரூ.40,000 |
| மொத்த நிலுவை .. | | ரூ.65,000 |
| 3. விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய தொகை : | | |
| படிவங்களின்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை .. | | ரூ.25,000 |
| + கூடுதலாக சேர்க்கப்பட்ட தொகையில் மூன்றில்ஒருபங்கு .. | | ரூ. 10,000 |
| | | ரூ.35,000 |
| +ரூ.35000க்கு 3600 நாள் தாமதத்திற்கு 6சதவிகித வட்டி .. | | ரூ.20,712 |
| | | ரூ.55,712 |

<u>வணிகர்கள் சமர்ப்பித்த நமுனாக்களின் அடிப்படையில் வரிவிதிப்பு செய்து வரி ஒப்புக் கொள்ளப்பட்ட இனங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| படிவங்களின்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை | | .. | ரூ.15,000 |
| (a) வரி | .. ரூ.13,000 | | |
| (b) தண்டத் தொகை | .. ரூ. 12,000 | | |
| மொத்த நிலுவை | | .. | ரூ. 25,000 |
| <u>விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய தொகை</u> | | .. | |
| படிவங்களின்படி செலுத்த வேண்டிய வரிநிலுவை | | .. | ரூ.13,000 |
| +ரூ.13000க்கு 3600 நாள் தாமதத்திற்கு 6சதவிகித வட்டி | | .. | ரூ. 7,693 |
| | | | ரூ.20,693 |

<u>வரிபாக்கி எதுவும் நிலுவையில் இல்லாமல் தண்டத் தொகை அல்லது வட்டித் தொகை அல்லதும் இரண்டும் நிலுவையில் உள்ள இனங்கள்:</u>

| | | |
|---|---|---|
| (a) வரி | .. | ரூ. 10,000 |
| (b) வரிக்கு வட்டித் தொகை | .. | ரூ. 4,000 |
| மொத்த நிலுவை | .. | ரூ. 14,000 |

| | | |
|---|---|---|
| <u>விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய தொகை</u> | .. | |
| தண்டத் தொகை நிலுவையில் 10 சதவிகிதம் | .. | ரூ.1,000 |
| வட்டித் தொகை நிலுவையில் 25 சதவிகிதம் | .. | ரூ.1,000 |
| | | ரூ.2,000 |

**<u>பதவிப் பெயர் குறிப்பிட்ட அதிகார அமைப்பினால் (Designated Authority) தொகையை தீர்மானம் செய்வதற்கான கணக்கீடு :</u>**

விண்ணப்பதாரர் பெயர் :
வரிவிதிப்பு அலுவலகத்தின் பெயர் :
வரிவிதிப்பு அலுவலரின் பதவிப் பெயர் :
வரி விதிப்பு ஆண்டு மற்றும் சட்டம் :
31.3.2007–ன்படி நிலுவை விவரம் :

| | |
|---|---|
| வரி | : ரூ. |
| தண்டம் | : ரூ. |
| வட்டி | : ரூ. |
| மொத்தம் | : ரூ. |

அறிவிப்புத் தேதி முடிவடைந்த நாள் :
இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டட நாள் :
தாமதம் செய்யப்பட்ட நாட்கள் :
நிலுவை விவரம் :

அ) கணக்குகள் காட்டப்படாதவை
ஆ) கணக்குகள் சரிபார்க்கப்பட்டவை
இ) ஒத்துக்கொள்ளப்பட்ட வரிவிதிப்பு
ஈ) தண்டம் / வட்டி தொடர்பான நிலுவை மட்டும்

| | |
|---|---|
| வரி | ரூ.............. |
| தண்டம் | ரூ.............. |
| வட்டி | ரூ.............. |
| மொத்தம் | ரூ.............. |
| விண்ணப்பத்துடன் செலுத்தப்பட்ட தொகை | ரூ.............. |
| செலுத்தப்பட வேண்டிய தொகை, ஏதாவது இருப்பின் | ரூ.............. |

செலுத்தப்பட வேண்டிய தொகை 10 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பின், கேட்பு அறிவிக்கை கொடுக்கப்பட வேண்டும்.

ஒம்/– வி.கு.ஜெயக்கொடி,
முதன்மை செயலர் / வணிக வரி ஆணையர்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

இணை ஆணையர் (சிறப்புக் குழு)